மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி

முன்னிலை: திருமதி.எம்.சாதத்துனிஷா,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

2023-ம் ஆண்டு ஜுலை திங்கள் 18-ம் நாள் செவ்வாய்கிழமை

**இடைமனு எண்:1/2022**

(இன்)

**அசல் வழக்கு எண்.255/2019**

1. கா. மருந்தாயி
2. கா. ஒய்யம்மாள்
3. கா. ஜெயமணி
4. கா. ஜெயலலிதா ... மனுதாரர்கள்/

(Amended as per I.A.No.1/2023 dated:26.04.2023) 8 முதல் 11 பிரதிவாதிகள்

/ எதிர் /

கா.ஜெகஜோதி பெரியகருப்பன் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி

1. ரா. ராஜாராம்
2. ரா. நல்லகருப்பன் (எ) கருணாநிதி
3. ரா. நீலாவதி
4. ரா. ராகினி
5. ரா. மருந்தாயி
6. ரா. நவமணி … 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 6 பிரதிவாதிகள்

மேற்படி மனுவானது 04.07.2023 அன்று என் முன்னிலையில் இறுதியான விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில்

கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எல்.விஜய்தேவராஜ் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பி.முத்தையா அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்..

**ஆணையுரை**

இம்மனு, மேற்படி வழக்கில் மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள அனுமதித்து உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சாராம்சம்:**

இம்மனுவில் மனுதாரர் தரப்பில், மனுதாரர் 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து இந்த மனுவினை தாக்கல் செய்வதாகவும், 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழ்குரையில் தன்னுடைய உடன்பிறந்த சகோதரிகளான 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மனு சொத்துக்களில் பாகம் இருப்பதை மறைத்துள்ளார்கள் என்றும், உண்மையில் 1ம் பிரதிவாதியின் இறந்து போய்விட்ட தகப்பனாரின் பாகத்தில் 1,2 பிரதிவாதிகளைத் தவிர 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் சரிபங்கு உண்டு என்றும், அதனைப் போலவே 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் சகோதரிகளான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் மேற்படியார்களின் தகப்பனாரான இறந்து போய்விட்ட காவேரி என்ற பெரியணன் பாகத்திலும் சரி பங்கு உண்டு என்றும், அதனை பொருத்து 8ம் பிரதிவாதி ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி விவரங்களை தெரிவிக்க தவறுதலாக விடுபட்டு போய்விட்டது என்றும், மேற்படி

விவரங்களை 8ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதன் மூலமாக தெரிவிக்க வேண்டியுள்ளது என்றும், மேற்படி விவரங்களை கூடுதல் எதிர்வழக்குரை மூலம் தெரிவிப்பது மூலம் மட்டுமே சமூகம் நீதிமன்ற வழக்கில் சரியான எழுவினா வனைவதற்கும் அதன் மூலம் சரியான தீர்மதானம் செய்வதற்கும் அவசியமானதாகும் என்றும், எனவே மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள அனுமதிக்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**<u>3. 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு எதிர்உரையின் சாராம்சம்:</u>**

2ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்றும், தாவா சொத்துகளில் வாதி ஜெகஜோதி பெரியகருப்பனும் அவரது தாயாரான கொப்பாள் மற்றும் 8 முதல் 11 பிரதிவாதிகளின் தகப்பனாரான காவேரி பெரியணன் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் மற்றும் 2 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனாரான ராமையா என்பவருக்கும் இடையில் சுமார் 50 வருடங்களுக்கு முன்பே பாகப்பிரிவினை நடந்து தாவா சொத்துக்கள் உட்பட இன்னும் பிற பூர்வீக சொத்துக்களை சரிபாதியாக பிரித்துக் கொண்டுவிட்டார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது 2ம் பிரதிவாதியான மருந்தாயி என்பவரை தூண்டிவிட்டு இந்த தேவையற்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதியின் தந்தை காவேரி என்ற பெரியணன் உயிரோடு இருந்த காலத்திலேயே தன் மனைவியும், வாதியின் தாயாருமான 7ம் பிரதிவாதிக்கும், தனது மகன்களான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்களை தனித்தனியாக கொடுத்து விட்டார் என ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், வாதி பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்ய

வேண்டுமானால் அவரது தாயார் அவரது சகோதரிகள் மீது மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றும், வாதியின் தந்தை தனக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களை தனது மனைவி 7ம் பிரதிவாதிக்கும், மகள்களான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்களை தனித்தனியாக கொடுத்து விட்டார் என கூறிவிட்டு இன்னும் பாகப்பிரிவினையே நடக்கவில்லை என கூறியிருப்பது தவறு என்றும்,

இந்நிலையில், தாவா 1வது இலக்கச் சொத்தும் வாதியின் தகப்பனார் காவோபி பெரியணனும் அவரது சகோதரரும் எதிர்மனுதாரரின் தகப்பனாருமான ராமையாவும் பிரித்துக் கொண்டு மேற்கு பக்கம் சரிபாதி பாகத்தை வாதியின் தந்தையும், கிழக்கு பக்கம் சரிபாதி பாகத்தை அவரின் சகோதரரும் பிரதிவாதியின் தந்தையுமான ராமையாவும் அனுபவித்து வந்தனர் என்பதை வாதி ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், இதன் மூலம் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணனுக்கும், எதிர்மனுதாரரின் தகப்பனார் ராமையா என்பவருக்கும் இடையில் ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்பது தெளிவாக தெரிகிறது என்றும், மேற்கண்ட 1வது இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 10 செண்ட் என்றும், இதில் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் பெயரில் சர்வே எண்:280/2A-ல் 50 செண்ட் தனிப்பட்டாவாக உள்ளது என்றும், மீதம் உள்ள 60 செண்ட்டும் அதே சர்வே எண்:280/2Bல் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் பெயரிலும், எதிர்மனுதாரர் தகப்பனார் ராமையா பெயரிலும் கூட்டுபட்டாவாக உள்ளது என்றும், மேற்கண்ட 60 செண்ட்டும் எதிர்மனுதாரர் தகப்பனார் ராமையாவின் அனுபவத்திலிருந்து அவர் இறப்பிற்கு பின்பு எதிர்மனுதாரர்

அனுபவத்தில் உள்ளது என்றும் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், அதே போல் தாவா 2வது இலக்கச் சொத்து மேற்படி ராமையா இறப்பிற்கு பிறகு நாளது தேதி வரை பிரதிவாதிகளின் அனுபவத்திலும் பாத்தியத்திலும் இருந்து வருகிறது என்றும், தாவா 3வது இலக்க சொத்தும் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் என்பவருக்கும் அவரது சகோதரரும் பிரதிவாதிகளின் தகப்பனாரும் ஆன ராமையா அவர்களும் தங்களுக்குள் சரிபாதியாக பிரித்துக் கொண்டு அனுபவித்து வந்தார்கள் என்றும் வாதி ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், தாவா 4வது இலக்கச் சொத்தும் ராமையா இறப்பிற்கு பின்பு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டு அவர்களது அனுபவத்திலும், பாத்தியத்திலும் நாளது தேதி வரை உள்ளது என்றும், மேலும் தாவா 4வது இலக்க சொத்தை பொருத்து 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வழக்கின் வாதியின் தாயார் கொப்பாள் மற்றும் அவரது மூத்த சகோதரிகள் ஆன மருந்தாயி, ஒய்யம்மாள், ஜெயமணி, ஜெயலலிதா ஆகியோர்களுக்கு எதிராக திருப்பத்தூர் டி.துமு.கோர்ட்டில் அசல் வழக்கு எண்:26/98 கீழ் தங்களுக்கு பாத்தியப்பட்டது என டிக்ளர் செய்தும், 1 முதல் 5 பிரதிவாதிகள் தடையும் இடைஞ்சலும் செய்யக் கூடாது என்று 1 முதல் 5 பிரதிவாதிகள் மீது ஒரு சாஸ்வத இன்சங்சன் டிக்ரி பிறப்பிக்கும் படி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு 2ம் பிரதிவாதி மற்றும் மேற்கண்ட அசல் வழக்கு எண்:26/98ல் 8ம் பிரதிவாதியும், இவ்வழக்கின் 2ம் பிரதிவாதியுமான நல்லகருப்பன் கருணாநிதி ஆகியோருக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பினை எதிர்த்து 1 முதல் 5 பிரதிவாதிகள் மாண்புமிகு சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு A.S.No.111/2002ன் கீழ் மேல்முறையீடு செய்தும், மேற்படி

வழக்கு உபயதரப்பு விசாரணைக்கு பின்பு மேற்கண்ட மேல்முறையீடு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட மேல்முறையீட்டு வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்தும், அதில் M.P.No.1/2011ன் S.A.(MD) SR.No.5790/2005ல் மேற்படி மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1520 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என மனுதாக்கல் செய்யப்பட்டு ரூ.250/- மட்டும் மதுரை ஸ்டேட் லீகல் சர்வீசஸ் அதாரிடிக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது என்றும், ஆனால் மேற்கண்ட மேல்முறையீட்டு மனுதாரர்கள் மேற்படி செலவுத் தொகை செலுத்தாததால் மேற்படி அப்பீல் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எனவே மேற்படி மனுவை மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரரின் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதே ஆகும். மேலும், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு:</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் தீர பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள்/8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் இந்த மனுவும் அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் இந்த அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் சகோதரிகளான மனுதாரர்கள் / 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் அவர்களின் தகப்பனாரான இறந்து போன காவேரி என்ற பெரியண்ணன் பாகத்தில் சரிபங்கு உண்டு என்றும், அதனை குறித்து 8 முதல் 11ம் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்கண்ட விவரத்தை தெரிவிக்க தவறுதலாக விடுபோய்விட்டது என்றும், எனவே அந்த விவரங்களை கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதன் மூலமாக தெரிவிக்க வேண்டியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை குறித்து 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்மனு உரையில் மேற்படி மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இதனை குறித்து பரிசீலனை செய்ததில், 8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தில் வாதிக்குரிய பாகம் கிடைக்கத்தக்கது என்பதில் இந்த 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறியுள்ள நிலையில், பின்னிட்டு இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் 3 முதல் 6 மற்றும் 8 முதல் 11 பிரதிவாதிகளுக்குரிய பாகத்தினை தீர்மானம் செய்ய முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

மேற்கண்டவாறு பாகம் கோரி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் எதிர்பாத்திய வழக்காக தகுந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தி பரிகாரம் கோர வேண்டியுள்ள நிலையில், கூடுதல் எதிர்வழக்குரை மட்டும்

தாக்கல் செய்து அதில் எதிர்பாத்திய உரிமை கோரியிருப்பதும், மேலும் மேற்கண்ட 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையில், இந்த பிரதிவாதிகளுக்கும் சேர்த்து இந்த மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருப்பதும் ஏற்புடையதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே மேற்கண்ட பரிசீலனைகளின் அடிப்படையிலும், வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் தன்மையை கருத்திற்கொண்டு இந்த மனுவை அனுமதிப்பது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் ஏற்புடையதாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2023 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 18-ஆம் நாள் செவ்வாய்கிழமை அவையறிய பகரப்பட்டது.

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

/ உண்மை நகல் /

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.